# விவிலிய மாதம்

## செப்டம்பர் 2023

## விவிலிய வாரம்

**18 - 23 செப்டம்பர் 2023**

# விவிலிய ஞாயிறு

**24.09.2023**

## மையப் பொருள்

**"'உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு'
(எசா 54:2) : இறைவார்த்தையை நம் வாழ்வில்
அடையாளம் கண்டு பதில் அளிக்க"**

**விவிலிய மாதம் – செப்டம்பர்**

முதல் ஞாயிறு - 03.09.2023

**இறை–மானுட உறவில் இறைவார்த்தை**

இரண்டாம் ஞாயிறு - 10.09.2023

**குடும்ப உறவுகளில் இறைவார்த்தை**

மூன்றாம் ஞாயிறு - 17.09.2023

**சமூக உறவில் இறைவார்த்தை**

நான்காம் ஞாயிறு - 24.09.2023

**உலகோடு உள்ள உறவில் இறைவார்த்தை**



| தமிழக விவிலியப் பணிக்குழுவின் கீழ்கண்ட நிகழ்வுகளில் பங்குபெற்று பயனடைய தயாராகுங்கள் | | |
|---|---|---|
| **நிகழ்வு** | **தேதி** | **மண்டலம்** |
| **கருத்தமர்வு : “இறைவார்த்தையின் ஒளியில் மக்களாட்சியை மீட்டெடுக்க”** | 23.09.2023 | மதுரை மண்டலம் - வாடிப்பட்டி |
| | 02.10.2023 | மத்திய மண்டலம் |
| | 23.10.2023 | மேற்கு மண்டலம் |
| | 24.10.2023 | வடக்கு மண்டலம் - முப்பணி மையம், திண்டிவனம் |
| | 28.10.2023 | தெற்கு மண்டலம் |
| **நற்செய்திப் பணியாளர்கள் (பொதுநிலையினர்) கூடுகை** | 25-26.11.2023 | புனித பெரிய நாயகி அன்னை திருத்தலம் கோனாங்குப்பம் |
| **கோடை விடுமுறை விவிலியப் பள்ளி பயிலரங்கம்** | 03-04.02.2024 | தெற்கு மண்டலம் |
| | 10-11.02.2024 | மதுரை மண்டலம் |
| | 17-18.02.2024 | மத்திய மண்டலம் |
| | 24-25.02.2024 | மேற்கு மண்டலம் |
| | 02-03.03.2024 | வடக்கு மண்டலம் முப்பணி மையம், திண்டிவனம் |
| **சான்றிதழ் வகுப்புகள்: வரலாற்று நூல்கள், மற்றும் ஞான நூல்கள்** | 13-17.05.2024 | முப்பணி மையம், திண்டிவனம் |

# தமிழக விவிலியப் பணிக்குழுத் தலைவரின் ஆசியுரை

இறைவார்த்தையின்பால் தாகம் கொண்டுள்ள தமிழக இறை மக்களுக்கும், இறைவார்த்தைப் பணிக்காகத் தங்களையே முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுச் செயலர் தந்தையர்களுக்கும், விவிலியப் பணியாற்றும் இருபால் துறவியருக்கும், தன்னார்வமாய் விவிலியப் பணி செய்யும் அனைவருக்கும் இறை இயேசுவின் பெயரில் இனிய வாழ்த்துகள்!

கடந்த ஏழு ஆண்டுகளாக தமிழக விவிலியப் பணிக்குழுவின் தலைவராக இருந்து பணிக்குழுவை வழிநடத்திய **மேதகு முனைவர் M. தேவதாஸ் அம்புரோஸ்**, மேனாள் தஞ்சாவூர் ஆயர் அவர்களுக்கு நம்முடைய உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மறைமாவட்ட ஆயர் பொறுப்பிலிருந்து அவர் ஓய்வு பெற்றாலும் விவிலியப் பணிக்கு ஓய்வில்லை. இன்னும் பல்லாண்டுகள் உடல் உள்ள நலத்தோடு அவர் பணி தொடர வாழ்த்துகின்றோம்! இறைவனிடம் வேண்டுகின்றோம்! மேலும் கடந்த 6 ஆண்டுகளாக விவிலியப் பணிக்குழுவின் செயலராக மிகச் சிறப்பாக பணியாற்றி இறைவார்த்தையை எட்டுதிக்கும் எடுத்துச்சென்ற கோட்டாறு மறைமாவட்டத்தைச் சார்ந்த **அருள்பணி. உபால்டு மரியதாசன்**, அவர்களுக்கு நெஞ்சம்நிறை நன்றிகளை உரித்தாக்குகின்றேன். மறைமாவட்டத்தில் அவர் பணி சிறக்க வாழ்த்துகின்றேன்!

திண்டிவனத்தில் உள்ள விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு மையம் தனது பொன்விழாவை கொண்டாடும் இவ்வாண்டில் **"உருவாக... உருவாக்க"** என்ற விருதுவாக்கை முன்னிறுத்தி பல நிகழ்வுகளை விவிலியப் பணிக்குழு முன்னெடுக்கின்றது.

**"'உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு' (எசா 54:2) : இறை வார்த்தையை நம் வாழ்வில் அடையாளம் கண்டு பதிலளிக்க"** என்ற தலைப்பின் அடிப்படையில் இவ்வாண்டு விவிலிய மாதம், வாரம், ஞாயிறு கொண்டாட்டங்களை சிறப்பிப்பதும் முக்கியத்துவம் பெறுகின்றது.

விவிலியத்தின் திருத்தியப் பதிப்பிற்காக எல்லாரும் காத்திருக்கின்றோம். அதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத்தருணத்தில், **"எனக்கொரு விவிலியம், இதோ! உனக்கொரு விவிலியம்"** என்ற சொலவடையைப் பின்பற்றி ஒவ்வொருவருக்கும் ஒரு விவிலியம் என்ற உயர்ந்த நோக்கில், இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு ஒரு விவிலியத்தை அன்பளிப்பாகக் கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழக ஆயர் பேரவையின் தீர்மானத்தின்படி மறைமாவட்டங்களின் பங்களிப்பான **'விவிலிய ஞாயிறு உண்டியல்'** காணிக்கையில் ஒரு பகுதியை திண்டிவனம் முப்பணி மைய இயக்குநருக்கு அனுப்ப ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் மறைமாவட்டச் செயலர்களுக்கு நினைவுறுத்துகிறேன்.

தமிழக விவிலியப் பணிக்குழு முன்னெடுக்கும் அனைத்துக் காரியங்களிலும் ஒத்துழைத்து இறைவார்த்தையை அனைவருக்கும் எடுத்துச் செல்ல உங்கள் ஒவ்வொருவரையும் உளமார வாழ்த்துகிறேன்; ஆசி வழங்குகிறேன்.

என்றும் இறைவார்த்தைப் பணியில்,

**மேதகு ஆயர் அ. ஸ்டீபன்**

தூத்துக்குடி மறைமாவட்டம், தமிழக விவிலியப் பணிக்குழுத் தலைவர்

## தமிழக விவிலியப் பணிக்குழுச் செயலரின் வாழ்த்துரை

அன்புக்குரியோரே!

இறைமகன் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் ஒவ்வொருவருக்கும் இனிய நல்வாழ்த்துகள். ஏழு ஆண்டுகளாக தமிழக விவிலியப் பணிக்குழுவைத் திறம்பட வழிநடத்தி, குறிப்பாக விவிலியத் திருத்தப்பணியில் பெரும்பங்காற்றிய **மேதகு முனைவர் M. தேவதாஸ் அம்புரோஸ்**, மேனாள் தஞ்சாவூர் மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கு பணிக்குழுவின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழக விவிலியப் பணிக்குழுவின் தலைவராக புதிதாகப் பொறுப்பேற்றுள்ள **மேதகு முனைவர் அ. ஸ்டீபன்**, தூத்துக்குடி ஆயர் அவர்களை அன்போடு வரவேற்கின்றோம். அவர் பணி சிறக்க வாழ்த்துகின்றோம். எனக்குமுன் விவிலியப் பணிக்குழுவின் செயலராக 6 ஆண்டுகள் திறம்பட செயலாற்றி இப்பொழுது தம்முடைய சொந்த மறைமாவட்டத்தில் பணிபொறுப்பேற்றிருக்கும் **அருள்பணி. உபால்டு மரியதாசன்** அவர்களுக்கு பணிக்குழுவின் சார்பாக உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அவர் மேற்கொள்கின்ற அனைத்துப் பணிகளையும் சிறப்புடன் ஆற்ற அன்போடு அவரை வாழ்த்துகின்றோம்.

**"'உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு' (எசா 54:2): இறை வார்த்தையை நம் வாழ்வில் அடையாளம் கண்டு பதிலளிக்க"** என்ற பொதுத் தலைப்பானது மாமன்றம் சார்ந்த Document for the Continental Stage of the Synod for a Synodal Church 2021 - 2024 (எண் 13, 100) என்பதன் அடிப்படையில் உருவாக்கப் பெற்றுள்ளது. நம் வாழ்க்கை அனுபவத்தை இறைவார்த்தையின் ஒளியில் அசைபோட்டு பொருள் கொள்ளவும், அதைப் பகிரவும் நாம் தூண்டுதல் பெறுகின்றோம். இங்கு 'கூடாரம்' என்பது மானுட உள்ளத்தைக் குறித்துக் காட்டுகிறது. இறைவார்த்தையின் ஒளியில் நம் வாழ்வின் பல்வேறு அம்சங்களை - ஆன்மிகம், அன்புறவு, சமூகம், அறிவு மற்றும் உடல் சார்ந்த வாழ்வை -முழுமையாகக் கண்டு இறைவார்த்தைக்குப் பதிலளிக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

இப்பொதுத் தலைப்பின் அடிப்படையில் செப்டம்பர் மாதம் முழுவதும் திருவிவிலியம் சார்ந்த அனைத்து நிகழ்வுகளையும், சிறப்பாக திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களையும் அமைத்துக் கொள்வது சாலச் சிறந்தது. அதன்படி திருப்பலிக் கொண்டாட்டங்களுக்கும் பல்வேறு போட்டிகளுக்கும் ஒரு சில பரிந்துரைகளை உங்கள் முன் வைக்கின்றோம். இவையாவும் உங்களுக்கு உதவுகின்ற சில ஆலோசனைகள் மட்டுமே. உங்கள் சூழலுக்கேற்ப விவிலிய மாதத்தைப் படைப்பாற்றலோடு பொருளுள்ள விதத்தில் கொண்டாட நெஞ்சம் நிறை வாழ்த்துக்கள்.

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்,**
செயலர்,
தமிழக விவிலியப் பணிக்குழு.

## முப்பணி மைய இயக்குநரின் பேனாவிலிருந்து...

## "இறைவார்த்தையின் இன்றைய இறைவாக்கினர்கள் நீங்களே"

### (எனக்கொரு விவிலியம், இதோ! உனக்கொரு விவிலியம்)

*பதினைந்து ஆண்டுகள் மிகப் புனிதமான திருவிவிலிய மொழியாக்கத் திருப்பணிக்காகத் தன் வாழ்நாளை செலவிட்ட புனித ஜெரோம் "திருவிவிலியத்தை அறியாதவர் கிறிஸ்து இயேசுவை அறியாதவர்" என்று அனுபவித்துக் கூறியுள்ளார்.*

*கிறிஸ்துவை அறியாதவர், தெரியாதவர், அனுபவிக்காதவர் உண்மைக் கிறித்தவராக இருக்க இயலாது. இயேசுவை அறிந்துகொள்ளும் அளப்பரிய அறிவையும், ஆற்றலையும் தருவது திருவிலியம் மட்டுமே. திருவிவிலியத்தைத் தன் கரங்களில் ஏந்துகின்ற எந்த ஒரு மனிதரையும் அந்தத் திருவிவிலியம் அவரது வாழ்வில் எல்லாச் சூழ்நிலைகளிலும் தாங்கிக் கொள்கிறது. நம் புனிதர்களின், நல்ல மனிதர்களின் வாழ்வு நமக்குக் கற்றுத் தருகின்றது. பாடம் இது.*

*திருவிவிலியம் புனித நூல் மட்டுமல்ல ஒவ்வொரு மனிதரின் வாழ்க்கை நூலும்கூட. எனவேதான் "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசற்றுங்கள்" (மாற் **16:15**) என்று இயேசுவே திருமுழுக்கு பெற்ற நம் ஒவ்வொருவருக்கும் கட்டளையாகத் தந்துள்ளார். புனிதப் பவுலடியாரைப் போல" வாழ்பவன் நான் அல்ல கிறிஸ்துவே என்னுள் வாழ்கிறார்" (கலா **2:20**) என்று சொல்லும் அளவுக்கு இயேசுவை அறிவிக்காவிட்டாலும், "இயேசுவே ஆண்டவர்" (உரோ **1:9,13; 1** கொரி **12:3**) என்று அறிக்கையிடாவிட்டாலும், நாம் மீட்பு பெறவும், இயேசுவின் கட்டளையை நிறைவேற்றிடவும் ஆசைப்படும் மனிதர்களுக்குத் திருவிவிலியம் தந்து இறை வார்த்தையின் இறைவாக்கினர்களாக ஏன் வாழ முடியாது ?*

*ஏராளமான மனிதர்கள் இறைவார்த்தைக்காக (திருவிவிலியம்) ஏங்கிக் கொண்டும் தாகத்தோடும் உள்ளார்கள். விலை கொடுத்து வாங்க இயலாத நிலையில் இருக்கின்ற பலருக்குத் திருவிவிலியத்தைக் (இயேசுவைப் பற்றிய நற்செய்தியை) கொடுக்க நாம் ஏன் முன்வரக் கூடாது ?*

*திருவிவிலியம் காட்டும் இயேசுவை அறிவிக்க வேண்டியது நம்மேல் சுமத்தப்பட்ட புனிதப் பணி என்பதை ஏன் கட்டாயக் கடமையாக ஏற்று தேவையில் உள்ளோருக்கு திருவிவிலியம் கொடுக்கக் கூடாது ? எதற்கெல்லாமோ எவ்வளவோ செலவழிக்கும் நாம் ஏன் திருவிவிலியம் வாங்க இயலாதவர்களுக்காக உதவி செய்யக்கூடாது ?*

*"எனக்கொரு விவிலியம், இதோ ! உனக்கொரு விவிலியம்" என்ற திட்டத்தில் சேர்ந்து இரு திருவிவிலியமும் அதற்கு மேலும் தந்து "இறை வார்த்தையின் இறைவாக்கினர்களாக" வாழ்ந்திட அழைக்கின்றோம்.*

### தொடர்புக்கு

**இயக்குநர்**
*தமிழக முப்பணி மையம்*
*திண்டிவனம் - **604 001***
*அலைபேசி : **94438 46690***
E-mail : directortnbclc@gmail.com

**செயலர்**
*தமிழக விவிலியப் பணிக்குழு*
*தமிழக முப்பணி மையம்*
*திண்டிவனம் - **604 001***
*அலைபேசி : **63812 47710***
E-mail : tnbcbc1974@gmail.com

***குறிப்பு :*** *ஒவ்வொரு மாதமும் "இறைவார்த்தையின் இறைவாக்கினர்கள்" பெயர்கள் - ஊர் **இனிய தோழன்** பத்திரிக்கையில் வெளியிடப்படும். இது முப்பணி மைய பொன்விழா ஆண்டின் புதிய திட்டம்.*

# விவிலிய மாதம், வாரம், ஞாயிறு திருப்பலிக்கான பரிந்துரைகள்

## மாதத்திற்கான பொது கருத்து

**"'உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு' (எசா 54:2) : இறைவார்த்தையை நம் வாழ்வில் அடையாளம் கண்டு பதில் அளிக்க"**

## 03.09.2023 - பொதுக்காலம் 22ஆம் ஞாயிறு

**மையக்கருத்து** : **'இறை - மானுட உறவில் இறைவார்த்தை'**
**முதல் வாசகம்** : எரேமியா 20:7-9
**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 63:1, 2-3, 4-5, 7-8
**இரண்டாம் வாசகம்** : உரோமையர் 12:1-2
**நற்செய்தி வாசகம்** : மத்தேயு 16:21-27

### திருப்பலி முன்னுரை

நல்லுறவின் நாயகராம் இயேசுவில் பேரன்புமிக்க சகோதர சகோதரிகளே! 'நான் உங்கள் கடவுள்; நீங்கள் என் மக்கள்' என்று நம்மீது அன்புறவு கொண்டு, நம்மை நாளும் தம்மோடும் நமக்கு அடுத்திருக்கும் அனைவரோடும் தம் வார்த்தை வழியாக இணைந்து வழிநடத்தி வருகிறார் இறைவன். அவர் நம் இதயத்தை விரிவாக்கி அதையே உறவின் சங்கமமாக உருவாக்கியுள்ளார். உண்மையின் அடிப்படையில் நாம் இறைவார்த்தையை அடையாளம் கண்டு, உன்னத வாழ்வை அடைய அவரே நமக்கு உதவி நிற்கிறார். அவரது வார்த்தை வழி அமையும் உறவே நம் வாழ்வுக்கு ஊடகமாக அமைய இத்திருப்பலியில் அருள்வேண்டுவோம்.

### மறையுரைக் குறிப்புகள்

- படைப்பு அனைத்தும் படைத்தவரை நாடிச் செல்கின்றது. இறைவனால் படைக்கப்பட்ட மனிதனின் ஆன்மாவும் இறைவனுக்காக ஏங்குகின்றது (காண். திபா 63:1).
- "உம்மிலன்றி என் ஆன்மா வேறு எதிலும் அமைதியடைவதில்லை" - புனித அகுஸ்தின்.
- நம்பிக்கையாளரின் ஆன்ம வாழ்விற்கு அடிப்படையும் ஊற்றுமாக இருப்பது இறைவார்த்தை. இறைவார்த்தை இறைவனை

வெளிப்படுத்துகிறது. அவருடைய விருப்பத்தை நமக்குத் தெளிவுபடுத்தி அதைச் செயல்படுத்தவும் நம்மை அழைக்கிறது.

- முதல் வாசகம் இறைவார்த்தைப் பற்றி இருப்பது காணத் தக்கது. மக்களினங்களுக்கும் அரசர்களுக்கும் இறைவார்த்தை அறிவிக்க அழைப்புப் பெற்றார் இறைவாக்கினர் எரேமியா. இறைவனின் விருப்பத்தின்படி மக்கள் நடக்கத் தவறிய காலக்கட்டத்தில் அவர்களை நெறிப்படுத்த இறைவார்த்தை அவருக்குக் கொடுக்கப் பட்டது. ஆனால் அவர் அறிவித்த வார்த்தையால் அவருக்கு மிஞ்சியது ஏளனமும் பழிச்சொல்லுமே. "உம் சொல் என் இதயத்தில் பற்றியெறியும் தீபோல இருக்கின்றது. அது என் எலும்புகளுக்குள் அடைப்பட்டு கிடக்கின்றது. அதனை அடக்கி வைத்துச் சோர்ந்து போனேன்" (எரே 20:9) என்று இறைவனிடம் முறையிடுகிறார் எரேமியா.
- நம் ஆன்மிக வாழ்வில் - இறை - மானுட உறவில் செயல்படும் இறைவார்த்தையை நம்மில் அடக்கி வைக்க முடியாது. அதற்குச் செயல்வடிவம் கொடுத்தே ஆக வேண்டும். அதைச் செயல் படுத்துவதில் எரேமியா போன்று துன்பப்படவும் வேண்டியுள்ளது.

**சிந்தனைக்கு**

1. எந்த இறைவார்த்தை இறைவனோடு உனக்குள்ள உறவை ஆழப்படுத்துகிறது? இறைவனுக்காய் உள்ள தாகத்தை உன்னிலே அதிகப்படுத்துகிறது?
2. அவ்வார்த்தை உனக்கு விடுக்கும் சவால் என்ன? அதற்கு எப்படிப் பதில் கொடுக்கப் போகிறாய்?

## 10.09.2023 - பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு

**மையக்கருத்து** : **'குடும்ப உறவுகளில் இறைவார்த்தை'**

**முதல் வாசகம்** : எசேக்கியேல் 33:7-9

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 95:1-2, 6-7, 8-9

**இரண்டாம் வாசகம்** : உரோமையர் 13:8-10

**நற்செய்தி வாசகம்** : மத்தேயு 18:15-20

**திருப்பலி முன்னுரை**

நல்ல குடும்பமாக வாழ நாள்தோறும் நம்மை அழைக்கும் நாயகராம் இயேசுவுக்குள் அன்புள்ள சகோதர சகோதரிகளே! குடும்பமே குவலயத்தின் உயிரணு என்றும், நல்ல குடும்பம் பல்கலைக் கழகம் என்றும் நாம் அறிந்துள்ளோம். நாடு போற்றும் நல்ல குடும்பமாக நாம் வாழ இறைவன் தம் வார்த்தைகளை விடுத்து நமக்குத் துணை செய்து வருகின்றார். "மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக் கொண்டிருந்தோமே" (லூக் 2:48) என்று காணாமல் போன மகனை ஆலயத்தில் கண்டபோது அன்னை மரியா சொன்ன வார்த்தைகள்

எவ்வளவு பாசம் நிறைந்தவை! அவை குடும்ப அன்புறவுக்கு இலக்கணமாக திகழ்கின்றன! குடும்பத்தில் ஒருவர் ஒருவர்மீது கரிசனையும் அக்கறையும் காட்டுவது அவசியம் என்பதைதான் அவை நமக்கு உணர்த்துகின்றன. இந்த விவிலிய மாதத்தில் நம் குடும்ப உறவுகள் விவிலியத்தின் ஒளியில் வளர வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**மறையுரைக் குறிப்புகள்**

- அன்புக்காக ஏங்காத மானிடர் இல்லை. அன்புறவின் அடிப்படையாக இருப்பது குடும்பம். குடும்பம் ஒருவருக்குத் தேவையான பாசத்தையும் நேசத்தையும் கொடுத்து முழு மனிதராக வளர்த்தெடுக்கிறது.
- ‘ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும்: அன்பே திருச்சட்டத்தின் நிறைவு’ என்று உரோமையருக்கு அறிவுறுத்துகிறார் புனித பவுலடியார் (இரண்டாம் வாசகம்).
- அன்பைப் பெறுபவர் மட்டுமே பிறரை அன்பு செய்யவும் முடியும்; அதுவே முழு மனிதப் பண்பு.
- உண்மை அன்பு தவறு செய்யும் மனிதரை நேரிய வழிக்குக் கொணர்வதில் அடங்கும் (காண் : நற்செய்தி).
- தீய வழியினின்று திரும்பிவர எச்சரிப்பதும் அன்புதான் (முதல் வாசகம்)
- அன்பு அடிப்படையில் பிறருக்கு நன்மையை விரும்புவது; நல்லதைச் செய்வது.
- சமூக ஊடகங்களுக்கும், போதை மருந்துகளுக்கும், அலைபேசிக்கும், ஏன் மதுபானங்களுக்கும்கூட இளையோர் அடிமையாகாதபடி எச்சரிப்பதும் அன்பின் வெளிப்பாடு அல்லவா?

**சிந்தனைக்கு**

1. குடும்ப அன்புறவுகளை உன்னில் ஆழப்படுத்தும் / வலுப்படுத்தும் இறைவார்த்தை எது?
2. “உன்மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” என்ற இறைவார்த்தைக்கு எவ்வாறு பதில் கொடுக்கப் போகின்றாய்?

## 17.09.2023 - பொதுக்காலம் 24ஆம் ஞாயிறு

**மையக்கருத்து** : **‘சமூக வாழ்வில் இறைவார்த்தை’**

**முதல் வாசகம்** : சீராக்கின் ஞானம் 27:30-28:7

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 103:1-2, 3-4, 9-10, 11-12

**இரண்டாம் வாசகம்** : உரோமையர் 14:7-9

**நற்செய்தி வாசகம்** : மத்தேயு 18:21-35

**திருப்பலி முன்னுரை**

கிறிஸ்துவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே! நல்ல சமூகமாக வாழ்ந்து, சாதனையும் சரித்திரமும் படைக்க இறைவார்த்தை நமக்கு அழைப்பு விடுக்கிறது. சமூகக் கூடாரத்தின் இடம், சங்கடங்கள் ஏதுமின்றி விரிவடைந்து, அதில் எல்லாரும் ஓர் இனமாக, ஒரு குலமாக கூட்டொருங்கியக்க இலக்கோடு பயணிக்க இறைவார்த்தை நமக்குத் துணைநிற்கிறது. நம் ஆண்டவர் இயேசு, “உமது வார்த்தையே உண்மை” (யோவா 17:17) என்று கூறுகின்றார். சமூகத்தைத் தீமையிலிருந்து விடுவித்து உண்மையினால் அதனை அர்ப்பணமாக்கும்படி தந்தையிடம் இயேசுவே வேண்டுகின்றார். இறைவார்த்தையே நமது வாழ்வை வளமாக்கும் அடித்தளமாக விளங்க அருள்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**மறையுரைக் குறிப்புகள்**

- சமூகமாக வாழ நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.
- சமூக வாழ்வில் சங்கடங்கள் ஏராளம் - பிரச்சினைகள் ஏராளம்.
- ஒருசில வேளைகளில் அநீதி, தீமைக்குப் பலியாகின்றோம் - வஞ்சிக்கப்படுகின்றோம். எனவேதான் ‘அடுத்திருப்பவர் செய்த அநீதியை மன்னித்து விடு - பகைமையை அகற்று’ என்று சீராக்கின் ஞானநூல் ஆசிரியர் அறிவுறுத்துகிறார் (முதல் வாசகம்). இயேசுவும் அதையே போதிக்கிறார் (நற்செய்தி).
- நாமும் தவறக் கூடியவர்கள்; நம் பாவங்களை இறைவன் மன்னிக்கிறார் என்பது, பிறரையும் மன்னிக்க நம்மைத் தூண்டுகிறது.
- சுமூகமான சமூக வாழ்க்கைக்கு இரக்கம், மன்னிப்பு ஆகியவை அவசியமாகின்றன. ஆனால் இரக்கத்தோடு பிறரை நடத்துவது பெரும் சவால்.
- உடலின் உறுப்புகளுல் ஒன்று பாதிக்கப்பட்டால் ஏனைய உறுப்புகளும் துன்பத்திற்கு உள்ளாகின்றன (1 கொரி 12:26). உண்மையான சமூக வாழ்வில் ஒருவருடைய துன்பம் எல்லாரையும் பாதிக்க வேண்டும்.
- விளிம்பு நிலையில் உள்ளவர்கள் மற்றும் வஞ்சிக்கப்பட்டவர்கள்பால் சமூக அக்கறை கொள்வது நம்பிக்கையாளருக்கு மட்டுமல்ல மானிடராக பிறந்த ஒவ்வொருவருக்கும் இயல்பாக இருக்க வேண்டிய பண்பு.

**சிந்தனைக்கு**

1. சமூக வாழ்வில் எந்த இறைவார்த்தை உன்னை வழிநடத்துகிறது?
2. நம்பிக்கையாளரோடும், பிறரோடும் உறவுகளை வலுப்படுத்த உன்னைத் தூண்டும் இறைவார்த்தை எது? அதற்கு எவ்வாறு பதில் கொடுக்கப் போகிறாய்?


**ஆரம்பமாகிறது!**

**விவிலிய மாதம்**
**செப்டம்பர்**
**தொடங்கி**
**வாரம் ஒருமுறை**
**இணையவழி**
**விவிலியக் கல்வி**



தொடர்பு கொள்ள

அலைபேசி : 63 81 24 77 10
E-mail : tnbcbc1974@gmail.com

# விவிலிய வாரநாள்களுக்கான திருவழிபாட்டுக் குறிப்புகள்

- **அந்தந்த நாளுக்குரிய திருக்குழும, காணிக்கைமீது, திருவிருந்துக்குப்பின் மன்றாட்டுகளையும் வாசகங்களையும் மாற்றாமல் பயன்படுத்திக்கொள்ளவும்.**
- **தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப சிறப்பிக்கும் குழுவை மாற்றிக் கொள்ளலாம்**

## 18.09.2023 - திங்கள்

| | | |
|---|---|---|
| **மையப்பொருள்** | : | **முதியோர் வாழ்வில் இறைவார்த்தை** |
| **சிறப்பிக்கும் குழு** | : | பங்கின் இருபால் முதியோர் |
| **முதல் வாசகம்** | : | 1 திமொத்தேயு 2:1-8 |
| **பதிலுரைப் பாடல்** | : | திருப்பாடல் 28:2, 7-8அ, 8ஆ-9 |
| **நற்செய்தி வாசகம்** | : | லூக்கா 7:1-10 |
| **சிறப்புச் சிந்தனை** | : | ‘மூத்தோர் சொல்லும் வார்த்தை அமிர்தம்’<br>“மகளே, தொன்றுதொட்டே நம் மூதாதையராய் விளங்கும் நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோரை நினைவில் கொள்” (தோபி 4:12)<br>முதியோர் இல்லங்கள் உருவாகக் காரணங்கள் எவை? |

## 19.09.2023 - செவ்வாய்

| | | |
|---|---|---|
| **மையப்பொருள்** | : | **பெற்றோர் வாழ்வில் இறைவார்த்தை** |
| **சிறப்பிக்கும் குழு** | : | பெற்றோர் |
| **முதல் வாசகம்** | : | 1 திமொத்தேயு 3:1-13 |
| **பதிலுரைப் பாடல்** | : | திருப்பாடல் 101:1-2அஆ, 2இ-3அஆ, 5, 6 |
| **நற்செய்தி வாசகம்** | : | லூக்கா 7:11-17 |
| **சிறப்புச் சிந்தனை** | : | ‘எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்திட’ என் பங்களிப்பு என்ன?<br>“உன் தந்தையையும் தாயையும் மதித்து நட. இதனால் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளிக்கும் நாட்டில் நீ நெடுநாள் நலமுடன் வாழ்வாய்” (இச 5:16). “சொல்லாலும் செயலாலும் |

உங்கள் பெற்றோரை மதியுங்கள்; அப்பொழுது உங்களுக்கு ஆண்டவரின் ஆசி கிடைக்கும்” (சீஞா 3:8).

## 20.09.2023 - புதன்

**மையப்பொருள்** : **இளையோர் வாழ்வில் இறைவார்த்தை**

**சிறப்பிக்கும் குழு** : இருபால் இளையோர்

**முதல் வாசகம்** : 1 திமொத்தேயு 3:14-16

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 111:1-2, 3-4, 5-6

**நற்செய்தி வாசகம்** : லூக்கா 7:31-35

**சிறப்புச் சிந்தனை** : ‘இளையோர் இவ்வுலகின் நிகழ்காலம்’

(*கிறிஸ்து வாழ்கிறார்* : திருத்தந்தை பிரான்சிஸ்)

‘இளைஞரே நீ போதும் எனக்கு’ *(புனித தொன்போஸ்கோ)*

“நீ இளைஞனாய்... கூட்டிச் செல்வார்” (யோவா 21:18).

சமுதாய வாழ்விலும் பண்பாட்டு வாழ்விலும் தங்கள் பங்கை ஆற்ற இளையோர் விழைகின்றனர். இந்தப் பேரார்வம் கிறிஸ்துவின் மனநிலையில் ஊன்றியிருக்க வேண்டும்” *(பொதுநிலையினரின் திருத்தூதுப் பணி, எண்: 12)*.

## 21.09.2023 - வியாழன்

**மையப்பொருள்** : **சிறார்கள் வாழ்வில் இறைவார்த்தை (திருத்தூதர், நற்செய்தியாளர் புனித மத்தேயு விழா)**

**சிறப்பிக்கும் குழு** : பங்கில் வாழும் இருபால் சிறார்கள்

**முதல் வாசகம்** : எபேசியர் 4:1-7, 11-13

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 19:1-2, 3-4

**நற்செய்தி வாசகம்** : மத்தேயு 9:9-13

**சிறப்புச் சிந்தனை** : எல்லாக் குழந்தைகளும் பிறப்பிலே நல்ல குழந்தைகள்தான். “சிறுபிள்ளைகளை என்னிடம் வர விடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்; ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது” (மத் 19:14). “இயேசு ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்” (லூக் 2:52).

## 22.09.2023 - வெள்ளி

**மையப்பொருள்** : **வறுமையுற்றோர் வாழ்வில் இறைவார்த்தை**

**சிறப்பிக்கும் குழு** : பங்கில் பிறரன்புப் பணிபுரிவோர்

**முதல் வாசகம்** : 1 திமொத்தேயு 6:2-12

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 49:5-6, 7-9, 16-17, 18-19

**நற்செய்தி வாசகம்** : லூக்கா 8:1-3

**சிறப்புச் சிந்தனை** : 'மண் குடிசை வாசல் என்றால்
தென்றல்வர வெறுத்திடுமா
மாலைநிலா ஏழையென்றால்
வெளிச்சம் தர மறுத்திடுமா' (திரைப்படப்பாடல்)
"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்" (மத் 5:3). "மகனே நீ வாழ்நாளில் நன்மைகளையே பெற்றாய்; அதே வேளையில் இலாசர் இன்னல் களையே அடைந்தார். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்; நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய்" (லூக் 16:25). "வளமையை உருவாக்குபவர் கடவுள்; வறுமையை உருவாக்குபவன் மனிதன்" (திமோசோன்).

## 23.09.2023 - சனி

**மையப்பொருள்** : **நலம் நாடுவோர் வாழ்வில் இறைவார்த்தை**

**சிறப்பிக்கும் குழு** : பக்த சபைகள் - அன்பியப் பொறுப்பாளர்கள்

**முதல் வாசகம்** : 1 திமொத்தேயு 6:13-16

**பதிலுரைப் பாடல்** : திருப்பாடல் 100:1-2, 3-4, 5

**நற்செய்தி வாசகம்** : லூக்கா 8:4-15

**சிறப்புச் சிந்தனை** : 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

நோய் நீங்க இயேசு எதிர்பார்ப்பது நம்பிக்கை ஒன்றே (லூக் 7:9).

கடவுளின் வார்த்தை ஒவ்வொன்றும் வாழ்வளிக்கும் வல்லமை கொண்டது.

"நோய்நாடி, நோய்முதல் நாடி, அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்" (குறள் 948).

# விவிலிய ஞாயிறு
# 24.09.2023
# சிறப்புத் திருப்பலி

## மையப் பொருள்

**“‘உன் கூடாரத்தின் இடத்தை விரிவாக்கு’ (எசா 54:2) : இறைவார்த்தையை நம் வாழ்வில் அடையாளம் கண்டு பதில் அளிக்க”**

## குறிப்புகள்

1. *திருப்பலி தொடங்குமுன் ஒரு திருவிவிலிய சிறப்புப் பவனிக்கு ஏற்பாடு செய்யலாம்.*
2. *திருக்குழும மன்றாட்டு, காணிக்கைமீது மன்றாட்டு, திரு விருந்துக்குப் பின் மன்றாட்டு ஆகியவற்றுக்கு உரோமன் திருப்பலிப் புத்தகத்தில் பொதுக்காலம் 25ஆம் ஞாயிறுக்குரியவற்றைப் பயன்படுத்துக (பக்கம் 473).*
3. *ஆலய வளாகத்திலோ, பீடத்தில் மக்கள் பார்க்கும் விதத்திலோ மையப் பொருளைப் பல வண்ணங்களில் (பிளக்ஸ்) பொறித்து வைக்கலாம்.*
4. *விவிலிய சிறப்புப் பவனி திருப்பலிக்குமுன் நடைபெறவில்லை என்றால் திருப்பலியில் இறைவாக்கு வழிபாட்டிற்குமுன் எளிய முறையில் திருவிவிலியப் பவனி நடத்தலாம்.*

## திருப்பலி முன்னுரை

‘இறைவன் என்னில் வாழட்டும்; இறைவார்த்தை என்னை ஆளட்டும்’ என்ற தாகத்தோடு திருவிவிலிய ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வருகை தந்திருக்கும் சகோதர சகோதரிகளே. விவிலிய ஞாயிறின் பொன்விழாத் தொடக்க நல்வாழ்த்துகள்.

மிகுந்த எதிர்நோக்கோடும் சிறந்த தயாரிப்போடும் நாம் இந்த ஆண்டு விவிலிய மாதத்தைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வருகிறோம். இறைவாக்கினர் எசாயா கூறியுள்ளபடி, நம் வாழ்விடமாகிய கூடாரத்தை விரிவாக்கவும் நமது இதயத்தின் ஆழத்தில் கடவுளது வார்த்தையை

அடையாளம் கண்டு நமது வாழ்க்கைச் சான்றுகள் மூலம் பதிலளிக்கவும் திருஅவை நம்மை இன்று தூண்டுகிறது. நமது அறிவும் உடலும் இறைவார்த்தையை நம்முள் ஊடுருவ விடாமல் தடுக்கும் உலகச் சூழல்களால் அலைக்கழிக்கப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். தம் வார்த்தையினால் நம்மை வியத்தகு முறையில் வழிநடத்திவரும் இறைவன், தமது ஆவியாரின் ஆற்றலால் நம்மில் செயல்படுகிறார் என்பதை நாம் இன்று உணர்வோம். நம் உடலுக்கு ஊட்டமும் அறிவுக்கு ஒளியுமாக விளங்கும் இறைவார்த்தைக்கு நாம் ஏற்ற முறையில் செவிசாய்த்து, நமது குடும்பம், குழுமம் மற்றும் சமூகம் அனைத்தும் இறையாட்சியின் இனிய தளங்களாக விளங்க அருள்வேண்டி இத்திருப்பலியில் ஒன்றிணைந்து மன்றாடுவோம்.

## மனத்துயர் வழிபாடு

இறைவார்த்தையை வாசிக்கவும் அதனை வாழ்வாக்கவும் ஏற்ற வழிமுறைகளை திருஅவை நமக்குக் கற்பித்து வருகிறது. அந்த இறை வார்த்தையை நமது கூடாரமாகிய இதயத்தில் தாங்காமல் வாழும் போது நமக்கு ஏற்படும் நலமற்ற சூழலையும் நாம் அறிவோம். இதுவரையில் அவற்றிற்காக மனத்துயர் அடையாத நிலையில், இப்போது நாம் இந்த வழிபாட்டில் ஏற்ற முறையில் பங்கேற்று நமது உடலும் அறிவும் இறைவார்த்தையின் அங்கங்களாக மாற அருள் வேண்டுவோம்.

## மனத்துயர் பல்லவி : (பாடலாம் / சொல்லலாம்)

*இறைவார்த்தை ஏற்க மனம் திறப்போம் - தினம்*
*குறைநீங்கி வாழ்ந்து மனம் மகிழ்வோம்*

**1. வாய்ப்புகளை வழங்கும் வானகத் தந்தையே!**

உமது வார்த்தைகளைக் கற்கவும், பிறருக்குக் கற்பிக்கவும் எங்களுக்குக் கிடைத்த அழைப்புகள், வாய்ப்புகள் ஆகியவற்றை ஏற்றுப் பயன்படுத்தாத குற்றத்துக்காக மனம் வருந்துகிறோம். **(பல்லவி)**

**2. வாழ்க்கையை வளமாக்கும் வானகத் தந்தையே!**

உமது ஒப்பற்ற உடனிருப்பை எமக்கு உணர்த்தும் திருவிவிலியத்தை எமது இல்லத்தில் அரியணையேற்றி வைக்காததற்காகவும், அப்படியே வைத்திருந்தும், அதனை வாசித்து எம் வாழ்வை வளப்படுத்திக் கொள்ளாத குற்றத்திற்காகவும் நாங்கள் மனம் வருந்துகிறோம். **(பல்லவி)**

**3. கட்டளைகள் வழியே எம்மைக் காக்கும் இறைவா!**

'விவிலியத்தை அறியாதவர் கிறிஸ்துவை அறியாதவர்' என்ற கருத்துரையை நாங்கள் கேட்டிருந்தும் பிறரில் கிறிஸ்துவை உருவாக்க, நாங்கள் அவர்களுக்கு உமது வார்த்தைகளை அறிவிக்காத குற்றத்திற்காக மனம் வருந்துகிறோம். **(பல்லவி)**

# இறைவாக்கு வழிபாடு

*(இத்திருப்பலியில் திருவிவிலியப் பவனி நடத்த வேண்டும் என்று பங்கு திருவழிபாட்டுக் குழு முடிவு செய்திருந்தால், ஆலய முகப்பில் திருவிவிலியம், ஒளி, தூபம், மலர் ஆகியவை வைக்கப்பட்டிருக்கும். திருப்பலியில் திருக்குழும மன்றாட்டு முடிவடைந்தவுடன் அனைவரையும் அப்படியே நிற்கும்படி அறிவுறுத்திவிட்டு குறு முன்னுரை வழங்கலாம்).*

## முன்னுரை

காலடிக்கு விளக்கும் பாதைக்கு ஒளியுமான கடவுளின் வாக்கு காலத்தை வென்று, கனிவினைத் தந்து நமது வாழ்விடக் கூடாரத்தை விரிவாக்க வல்லது. அதனை அடையாளம் கண்டு பதிலளிக்க அழைக்கப்பட்டுள்ள நாம் இந்தப் பவனியில் உள்ளத்தை ஒன்றுபடுத்திப் பங்கு பெறுவோம் (பாடப்படும் பல்லவியை எல்லாரும் பதிலுரையாகப் பாடலாம்).

**பல்லவி : வருகிறது வருகிறது வாழ்வுதரும் வார்த்தை**
**வரவேற்போம் வரவேற்போம் வாழ்ந்து அதைக் காட்ட**

- *இறை - மானுட உறவில் எல்லாரையும் வாழ வைக்க (பல்லவி)*
- *குடும்பம் உறவினில் சங்கமிக்க அழைப்பு விடுக்க (பல்லவி)*
- *சமூகங்களைக் கட்டிக்காத்து அவற்றை உறவினில் வளர்த்தெடுக்க (பல்லவி)*
- *இயற்கையோடு மானிடரை நல்லுறவுகொள்ள வழிகாட்டிட (பல்லவி)*

*(பவனி பீடத்தை அடைந்ததும் அலங்கரிக்கப்பட்ட அரியணையில் அதை வைத்து அப்பங்கின் வழக்கப்படி ஒளி - தூப - மலர்களால் அஞ்சலி செய்யலாம். எல்லாரும் திருவிவிலியத்தின் பக்கம் கைகளை நீட்டி அவற்றைக் கண்களிலும் முகத்திலும் ஒற்றிக்கொள்ள அறிவுறுத்தலாம். அது நமது உள்ளம் என்னும் கூடாரம் விரிவாக்கப்பட்டதன் அடையாளம் ஆகும்).*

## முதல் வாசக முன்னுரை: எசாயா 55:6-9

'எண்ணம் போல் வாழ்வு' என்பதை கேள்விப்பட்டிருக்கின்றோம். நம் எண்ணத்தில் இரக்கமும் மன்னிப்பும் இழையோட வேண்டும்; பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். இவை எல்லார்க்கும் தேவைப்படுபவையும் எல்லாராலும் பிறருக்கு வழங்கப்பட வேண்டியவையுமாகும். திருவிவிலியத் திருநாளைக் கொண்டாடும் நாம், இப்போது வாசிக்கப்படும் இறைவார்த்தைகளைக் கவனமுடன் கேட்டு நம் மனத்தில் பதிக்க முற்படுவோம்.

## பதிலுரைப் பாடல் : திருப்பாடல் 145:2-3, 8-9, 17-18

***பல்லவி :*** *தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கிறார்.*

**அல்லேலூயா**

உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி ஆண்டவரே, எங்கள் இதயத்தைத் திறந்தருளும். **- அல்லேலூயா**

**இரண்டாம் வாசக முன்னுரை: பிலிப்பியர் 1:20இ-24, 27அ**

கிறிஸ்துவின் நற்செய்திக்கேற்ப நடந்து கொள்ள நம்மை அறிவுறுத்துகிறார் திருத்தூதர் பவுல். கிறிஸ்துவின் மனநிலையைப் புரிந்துகொண்டு, முழுத் துணிவுடன் அவருக்குச் சான்று பகர்ந்து, வாழும் கிறிஸ்துவாக நம்மை அடையாளப்படுத்தும் விதத்தில் நமது உள்ளம் என்னும் கூடாரத்தை விரிவுபடுத்த அழைப்பு விடுக்கும் இந்த வாசகத்திற்குச் செவிகொடுப்போம்.

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 20:1-16அ**

உரிமையாளர், தம் விருப்பப்படி உடனுழைப்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கும் உரிமையைக் கொண்டுள்ளார். அதில் யாரும் தலையிடவோ கேள்வி கேட்கவோ கூடாது; முடியாது. திராட்சைத் தோட்ட வேலை யாள்கள் உவமையை இயேசு இன்று கூறி தாம் விரும்பும் பணியாளராக வாழ நம்மை அழைக்கிறார். பணியும் பண்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்ற சிந்தனையோடு நற்செய்தி வாசகத்தை உள்வாங்கிக் கொள்வோம்.

## மறையுரைக் குறிப்புகள்

- நாம் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்டிருக்கிறோம்.
- நம் அறிவாற்றலும் விருப்ப ஆற்றலும் கடவுளின் கொடையே.
- மானுட உடல் எடுத்து மண்ணகம் வந்த இறைமகன் இயேசு இறையாட்சியை வார்த்தையாலும் வல்ல செயல்களாலும் அறிவித்தார். தந்தையின் திருவுளப்படி தம் உடலில் பாடுகளை ஏற்று இறந்து, உயிர்த்து உலகுக்கு மீட்பு அளித்தார் (எபி 10:5-10). உலகம் உய்வதற்காக தம் உடலையும் இரத்தத்தையும் நமக்கு உணவாகவும் பானமாகவும் விட்டுச் சென்றார்.
- ‘வாழ்விலும் சாவிலும் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப் படுத்துவேன்’ என்று கூறும் பவுலடியார் நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக இன்னும் சிறிது காலம் வாழ வேண்டுமென்று ஆசிக்கிறார். நாம் வாழ்ந்தாலும் இறந்தாலும் அது ஆண்டவருக்-காகவே என்றும் நமக்கு அறிவுறுத்துகிறார் (இரண்டாம் வாசகம்).
- கடவுளின் சாயலாக படைக்கப்பட்ட நம்முடைய மண்ணக வாழ்வு, சிறப்பாக நம் அறிவாற்றல் பயனுள்ளதாக செலவழிக்கப்பட வேண்டும். முக்கியமாக, இயற்கையை வளப்படுத்த, உலகைப் புதுப்படைப்பாக மாற்ற, நம் அறிவாற்றல் பயன்பட வேண்டும் (தொநூ 1:26-28).

- அறிவாற்றல் பிறரை / இயற்கையை அழிப்பதற்கல்ல.
- பலனைக் கணக்கிடாமல் கடினமாக உழைக்க இயேசு அறிவுறுத்துகிறார் (நற்செய்தி).
- பணியைச் செய்; பலனை எதிர்பாராதே (பகவத் கீதை).

**சிந்தனைக்கு**

1. உலகம் உய்வதற்காக உன்னைக் கையளிக்கத் தூண்டும் இறைவார்த்தையை அடையாளம் கண்டுகொண்டாயா? அதற்கு உனது பதில் என்ன?
2. உலகை / இயற்கையை மேம்படுத்த உனது முன்னெடுப்புகள் எவை?

## நம்பிக்கையாளரின் மன்றாட்டுகள்

***பதிலுரை :*** *விவிலிய ஒளியில் வாழ்ந்திடவே*
*விண்ணகத் தந்தையே அருள்கூர்வீர்*

**1. கூடாரத்தை விரிவாக்க குவலயத்தை அழைக்கும் இறைவா**

தங்கள் இதயமென்னும் கூடாரத்தை விரிவுபடுத்தி, உம் ஆற்றல் நிறை வார்த்தைகளை அதில் பதித்து, எம்மை வழிநடத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், அருள்பணியாளர்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தங்கள் வாழ்க்கையில் உமது வார்த்தையினை அடையாளம் கண்டு வாழ்ந்து, உமக்குப் பதில் அளிக்க முன்வர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**2. உள்ளொளி வழங்கி உலகினை நடத்தும் உன்னத இறைவா**

எம் நாடு என்னும் மிகப் பெரிய சமூகம் இன்று சந்திக்கும் எண்ணற்ற பிரச்சினைகளிலிருந்து விடுபடவும், எங்கள் உரிமைகள் காக்கப்படவும், உண்மை, உழைப்பு, உயர்வு ஆகிய உயர் பண்புகளை உருவாக்கும் உமது அருள்வாக்கிற்கு எம் தலைவர்களும் நாங்களும் செவிகொடுக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**3. உறவே வாழ்வு என்ற உண்மையை உணர்த்தும் இறைவா**

உம்மோடும் குடும்பத்தோடும் குழுமத்தோடும் தலத் திரு அவையோடும் இயற்கையோடும் நல்லுறவு கொண்டு, உமது அருள்வாக்கினை நாங்கள் நாடிச் செல்லவும் அதையே வாழ்வாக்கி உறவுச் சமூகத்தை அமைத்துக் கொள்ளவும் அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**4. வாழ்வைக் கொடையாகத் தந்து வழிநடத்தும் இறைவா**

இந்த ஆண்டு திருவிவிலிய மாதமாக, வாரமாக, ஞாயிறாக நாங்கள் பல விதங்களில் உமது வார்த்தைக்கு விழா எடுத்து, எங்களைப் புதுப்பித்துக் கொள்ளவும் எங்கள் வாழ்வை உமது கொடைகளால் மேம்படுத்திக் கொள்ளவும் அயராது பணியாற்றிய தனி மனிதர்கள், நிறுவனங்கள், மறைமாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நீர் நிறை ஆசியளித்து, அவர்களைச் சிறப்பாக வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**5. துன்புறுவோருக்குத் தோழமை நல்கும் இறைவா,**

இறைவாக்குப் பணியில் இடர்பாடுகளை ஏற்றிருப்போர், வறுமை - பிணி - தனிமை - கலவரம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டோர், வேலையின்றி தவிப்போர் ஆகியோருக்கு உம் வார்த்தையின் ஒளியில் நல்வாழ்வும் ஆறுதலும் அளித்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## திருவிவிலிய ஞாயிறு சிறப்புக் காணிக்கை

*(அடையாளக் காணிக்கையாக பொருள்களுக்கு விளக்கமும் வேண்டுதலும் அளித்து திருப்பலியில் வழங்குவது திருவழிபாட்டு ஒழுங்குக்கு முரணானது)*

**விவிலியப் பணிக்கு உதவியாக,**

அ. விவிலியப் பிரதிகள்

ஆ. பணம் வைக்கப்பட்ட உறைகள் (Covers)

இ. விவிலியப் போட்டிகளுக்கான பரிசுப் பொருள்கள்

ஈ. விவிலியப் பணிக்குத் தேவைப்படும் பொருள்கள்

உ. பங்கின் மேம்பாட்டிற்கு உதவும் பொருள்கள்

*(திருவிருந்துக்குப்பின் கீழ்கண்ட உறுதிமொழி மன்றாட்டை ஒருவர் செல்ல எல்லாரையும் பின்தொடர்ந்து சொல்ல வைக்கலாம்).*

## உறுதிமொழி மன்றாட்டு

ஆற்றலின் ஊற்றாம் அன்புத் தந்தையே இறைவா/ ........................ பாதுகாவலில் வாழும் பங்கு மக்களாகிய நாங்கள் / எங்கள் இல்லங்களில் இறைவார்த்தையை அரியணையேற்றி வைக்கவும் / தினமும் அதனை வாசித்து திருவிவிலியத்தை பகிர்ந்து / அதன் ஒளியில் வாழவும், / வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, இறைவார்த்தையை ஏற்ற முறையில் / சான்றுடன் அறிவிக்கவும் / முன்மொழிகிறோம். / எமக்கு நிறைவாக ஆசியளித்தருளும் / - ஆமென்.

### சிறப்பு ஆசிகள்

**அருள்பணி :** தமது ஆற்றல்மிகு வார்த்தைகளால் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஊடுருவி, உங்கள் உள்ளமென்னும் கூடாரத்தை விரிவாக்க, தம் கொடைகளை ஈந்து, நாளும் காக்கும் தந்தையாம் இறைவன் உங்களுக்குத் தமது நிறை ஆசியை வழங்கிடுவாராக!

**எல் :** ஆமென்.

**அருள்பணி :** வாக்கு மானிடராகி, நம் நடுவில் வாழ்ந்து கொண்டிருக்கும் இயேசு, ஒவ்வொருநாளும் உங்கள் வாழ்வு உறவோடும், உண்மையின் ஒளியோடும் தொடரத் துணை நிற்பாராக!

**எல் :** ஆமென்.

**அருள்பணி :** உங்களை நாளும் வழிநடத்தும் தூய ஆவியார், நீங்கள் ஆற்றும் பணிகளையும், குறிப்பாக, உங்கள் இறைவாக்குப் பணிகளையும் வெற்றிபெறச் செய்வாராக!


**எல் :** ஆமென்.

**அருள்பணி :** எல்லாம் வல்ல இறைவன் தந்தை, மகன், தூய ஆவியார் தம் ஆசியை உங்களுக்கு நிறைவாக வழங்கிடுவாராக.

(*திருவிவிலியத்தால் ஆசியளிக்கலாம்*)

**எல் :** ஆமென்.

## நன்றிகள் பல...



*விவிலிய மாத சுவரொட்டி*

*வரைபடம் :*

**அருள்பணி. சகாய பெலிக்ஸ்**

கோட்டாறு மறைமாவட்டம்

*கையேடு தயாரிப்பில் உதவி :*

**வேதியர் பேரா. தி.ம. சந்தியாகு**

*தட்டச்சில் உதவி :* **திருமதி. வி. மேரிஸ்டெல்லா**

# பொருளுள்ள கொண்டாட்டத்திற்கு சில பரிந்துரைகள்

விவிலிய மாதக் கொண்டாட்டங்கள் முழு வெற்றி பெற, பங்கு அருள்பணியாளர், இருபால் துறவியர், ஆசிரியர்கள், வேதியர், கோவில் பணியாளர்கள், இளையோர், பங்கு விவிலியப் பணிக்குழு, பங்குத் திருவழிபாட்டுப் பணிக்குழு, பக்த சபையினர், அன்பியப் பொறுப்பாளர்கள் ஆகியோர் இணைந்து செயல்படுவது மிகவும் அவசியம்.

கிளைப் பங்குகளிலும் சிறப்பு ஏற்பாடுகள் செய்து விவிலிய மாதத்தைக் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.

தங்கள் பகுதியில் இடம்பெறும் விவிலிய மாதச் சிறப்பு நிகழ்வுகளை எம்முடன் பகிர்ந்துகொள்க [புகைப் படங்கள் மற்றும் செய்திகளை Whatsapp மூலம் அனுப்பி வைக்கவும்].

## விவிலிய மாதம் / வாரம் / ஞாயிறு

1. *சுவரொட்டிகள் தயார் செய்து ஆங்காங்கே மக்கள் பார்வைக்கு வைத்தல் [முடிந்தவரை பிளாஸ்டிக் தவிர்க்கவும்].*
2. *பதாகைகள் தயார் செய்து கையில் ஏந்தலாம்; ஆலயத்தில் தொங்கவிடலாம்.*
3. *செப்டம்பர் மாதம் முழுவதும் திருப்பலிக்கு முன்பும் பின்பும் ஆலயத்தில் ஒலிபரப்பப்படும் பாடல்கள் இறைவார்த்தையை மையமாகக் கொண்டு அமையும்படியாக பார்த்துக் கொள்ளலாம். VBS பாடல்களையும் பயன்படுத்தலாம்.*
4. *விவிலிய வாரம் முழுவதும் [ஞாயிறு தவிர] மாலை நேர திருப்பலிகள் நிறைவேற்றலாம். கொடுக்கப்பட்டிருக்கும் சிந்தனைகளின் அடிப்படையில் திருப்பலி, பகிர்வுகள் நடைபெறலாம். அந்தந்த குழுக்கள் திருப்பலியை சிறப்பிக்கலாம்.*
5. *விவிலிய ஞாயிறு மற்றும் விவிலிய வார திருப்பலிகளில் விவிலியம் / புதிய ஏற்பாடு இவைகளை காணிக்கையாகச் செலுத்தி அவைகளை ஏழைகளின் / மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்கு இலவசமாக வழங்கலாம்.*
6. *விவிலிய கண்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்யலாம். இந்த விவிலியக் கண்காட்சிகள் நிரந்தரமாக இருக்கவும் ஏற்பாடு செய்யலாம்.*
7. *விவிலியக் கட்டுரைகள், விவிலியம் சார்ந்த பத்திரிகைகள், விவிலிய படக்கதைகள், விவிலிய ஒலி – ஒளித் தகடுகள் வாங்கி வீடுகளுக்கு / குழந்தைகளுக்கு விற்பனை செய்யலாம்.*

*மறைமாவட்ட விவிலியப் பணிக்குழுவிடம் தொடர்பு கொள்ளவும்.*

8. *விவிலிய மாதத்தில் / வாரத்தில் ஒரு நாள் அல்லது ஒவ்வொரு நாளும் 'விவிலிய மாலை'யை கொண்டாடலாம். விவிலியம் சார்ந்த சொற்பொழிவுகள், வினாடி வினா, மனப்பாடப் போட்டி, மாறுவேடப் போட்டி, விவிலிய நாடகங்கள், விவிலிய கதாபாத்திரங்கள், கதைகள் பற்றிய திரைப்படங்கள் என்று ஒவ்வொரு நாளும் சிறப்பாகக் கொண்டாடலாம்.*

9. *விவிலியத்திலிருந்து ஒரு வாக்கியம் சொன்னால் புன்சிரிப்போடு கூடிய கைதட்டல் கொடுத்துப் பாராட்டவும்.*

10. *வீடுகளிலும் நிறுவனங்களிலும் விவிலியத்தை அரங்கேற்றம் செய்தல்.*

11. *ஒரு நாளைக்கு ஒரு வசனம் வீதம் முப்பது நாள்களும் முப்பது விவிலிய வசனங்களை வீட்டிலுள்ள அனைவரும் மனப்பாடம் செய்ய ஊக்குவிக்கலாம். அவ்வசனங்களை வசதியான இடங்களில் அனைவருடைய பார்வையிலும் படும்படியாக எழுதி ஒட்டலாம்.*

12. *விவிலிய ஞாயிறன்று சிறப்பான திருப்பலிக் கொண்டாட்டம். நாள் முழுவதும் பல்வேறு போட்டிகள், அன்று மாலை விவிலியக் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்.*

13. *செப்டம்பர் மாதத்தில் முடிந்த நாள்களில் எல்லாம் வீட்டு, ஆலய, பள்ளிகள், நிறுவனங்களின் வாயில்களில் விவிலியத்தோடு தொடர்புடைய (புதுமைகள், போதனைகள், உவமைகள்) கோலங்கள் வரையலாம் (உதவிக்கு VBS மாணவர் பயிற்சியேட்டு வரிப்படங்களைப் பயன்படுத்தலாம்).*

14. *செப்டம்பர் மாதம் அலைபேசித் தொடர்புகளில் சிறிய இறைவாக்கியத்தைப் பயன்படுத்தலாம்.*

15. *செப்டம்பர் மாதம் முழுவதும் இரவு குடும்ப இறை வேண்டலில் இறைவார்த்தையைப் பயன்படுத்தலாம்.*

## 2. வருடம் முழுவதும் விவிலியத்தைச் சிறப்பிக்கச் சில பரிந்துரைகள்

- *விவிலிய வழிபாடுகள் மற்றும் குழுத் திருப்பலிகள் கொண்டாடுதல்.*
- *விவிலிய பேட்ஜ், ஸ்டிக்கர் தயாரித்து வழங்குதல்.*
- *இறைவார்த்தைப் பகிர்வுக் குழுக்களை நடத்துதல்.*
- *அன்பியங்களில் விவிலிய நாளைக் கொண்டாடுதல்.*

- விவிலியத்தைச் சலுகை விலையிலோ, இலவசமாகவோ வழங்க நன்கொடையாளர்களை இனம் காணுதல்.
- விவிலியம் பரிசளித்தல்.
- ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் ஒலி பெருக்கி வழியாக இறைவார்த்தையை முழக்கம் செய்தல், விவிலியப் பாடல்களையும், நிகழ்ச்சிகளையும் ஒலி பரப்புதல், விவிலிய வாரக் கொண்டாட்ட நிகழ்வுகளையும் நினைவூட்டி அறிவித்தல்.
- விவிலிய விளையாட்டுகள், வினாடி-வினாப் போட்டிகள், விவிலிய கதாபாத்திரங்களாக நடித்தல், விவிலியப் பகுதிகளை மனப்பாடம் செய்து ஒப்பித்தல், விவிலிய நாடகங்கள் நடித்தல் போன்ற போட்டிகளை நடத்துதல். விவிலியக் கண்காட்சிகள் அமைத்தல்.
- விவிலியத்தில் உள்ள நபர்கள், இடங்கள், நிகழ்வுகளைக் குறித்து விடுகதைகள் தயாரித்தல்.
- கிராமியக் கலைகள் வழியாக (நடனம், கும்மி, கோலாட்டம், மயிலாட்டம், பட்டிமன்றம், ஒயிலாட்டம், வில்லுப்பாட்டு, கதாகாலட்சேபம்) விவிலிய நிகழ்ச்சிகளை வழங்குதல், விவிலியப் பாடல்களைப் (VBS) பயன்படுத்துதல்.
- விவிலியத் திரைப்படங்களைத் திரையிடுதல்.
- விவிலியக் குடும்பங்களின் பெயர்கள், இறைவார்த்தையில் வாழ்ந்த புனிதர்களின் படங்கள் திரையில் எழுதி அறியச் செய்தல்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான விவிலியம் வழங்குதல். (எ.கா) பார்வையற்றோருக்கான புதிய ஏற்பாடு + திருப்பாடல்கள் உள்ளன. உங்கள் மறைமாவட்டச் செயலர்களைத் தொடர்பு கொண்டு திண்டிவனம், விவிலியப் பணிக்குழுவிடமிருந்துப் பெற்றுக்கொள்ளவும்.
- இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் தனித்தனியாக விவிலிய முகாம்கள் நடத்துதல். பங்கை விட்டு வெளியே சென்றும் நடத்தலாம்.
- பேனா மற்றும் பரிசுப் பொருள்களில் இறைவார்த்தை Stickers ஒட்டுதல்.
- திருப்பலியில் காணிக்கைப் பவனியின்போது ஏழைகளுக்காக விவிலியப் பிரதிகளைக் காணிக்கையாக அளித்தல்.
- மக்களின் பயன்பாட்டிற்காக கோவில்களில் விவிலியங்களை வைத்தல்.
- விவிலிய வசனங்களுக்கு ஏற்ற படம் வரைந்து வசனத்தை எழுதுதல் (திராட்சைச் கொடி – கனிகள்).

- விவிலியக் கட்டுரைகளைத் தாங்கி வரும் [இனிய தோழன், விவிலிய விருந்து போன்ற] பத்திரிகைகளை பங்கிலும், வீடுகளிலும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்வது. கட்டுரைகளை வீடுகளில், அன்பியங்களில் விவிலியக் குழுக்களில் வாசித்துப் பகிர்ந்து கொள்வது.
- விவிலியப் பணிக்குழு, விவிலிய குழுமங்கள், விவிலிய நண்பர்கள், விவிலிய பணியாளர்கள், தன்னார்வப் பொது நிலையினர் என்று மறைமாவட்ட மற்றும் பங்குத் தளங்களில் விவிலிய மேய்ப்புப் பணிக்கான அமைப்புகளை உருவாக்குவது.
- உருவாக்க நிகழ்வுகள் : விவிலிய தலைப்புகளில் உரைகள், விவிலியச் செப வழிபாடுகள், விவிலியம் கற்கும் குழுக்கள், விவிலியப் பகிர்வுக் குழுக்கள், பங்கிலுள்ள சபைகள் மற்றும் குழுக்களுக்கான விவிலியக் கருத்தரங்கு [ஒவ்வொரு மாதமும் ஒரு ஞாயிற்றுக்கிழமை] இளையோருக்கான விவிலிய முகாம்கள்.
- குடும்பத் தலைவர் அல்லது பங்குத் தந்தையின் தலைமையில் இல்லங்களில் விவிலியத்தை நிறுவுதல். குடும்ப செப வேளையிலும், குடும்பக் கொண்டாட்டங்களின் போதும் விவிலியம் வாசித்தல்.
- அக்கம் பக்கமுள்ள குடும்பங்களைச் சந்தித்து விவிலியம் வாசிக்க ஊக்கப்படுத்துவது மற்றும் அவர்களுடைய தேவைகளுக்காக அவர்களோடு இணைந்து செபிப்பது.
- விவிலிய வங்கி உருவாக்குதல். 'எனக்கொரு விவிலியம், இதோ! உனக்கொரு விவிலியம்' என்ற அடிப்படையில் விவிலியம் வாங்க வசதி இல்லாதவர்களுக்கு குறைந்த விலையில் அல்லது இலவசமாக வழங்க ஏற்பாடு செய்தல்.
- பிறந்த நாள், புது நன்மை, உறுதிப்பூசுதல், திருமணம் மற்றும் ஜூபிலி கொண்டாட்டங்களின் போது விவிலியத்தை அன்பளிப்பாக வழங்குதல்.
- சூழ்நிலைகளைப் பொறுத்து சிறைக் கைதிகளுக்கு விவிலியம் வழங்குதல்.
- விவிலிய விளக்கவுரைகள், மாதாந்திர இதழ்கள் இவற்றை வாங்கி விவிலிய அறிவை வளர்த்துக் கொள்ளுதல். அவற்றைப் பிறருக்கும் கொடுத்து உதவுதல்.
- அஞ்சல் வழி விவிலிய படிப்புகள் மற்றும் இணையவழி விவிலிய படிப்புகளில் பங்கெடுத்தல் [விரைவில் தமிழக விவிலியப் பணிக்குழு இணையவழி விவிலியக் கல்வியை ஆரம்பிக்க இருக்கின்றது]. விவரங்களுக்கு: விவிலியப் பணிக்குழுச் செயலர், முப்பணி மையம் (TNBCLC), திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் – 604 001. அலைபேசி : 63 81 24 77 10.

- *மதம் சார்ந்த மற்றும் மதம் சாரா பத்திரிகைகளில் விவிலியத் தலைப்புகளில் அல்லது விவிலியம் காட்டும் விழுமியங்கள் குறித்து கட்டுரைகள் எழுதுவது.*
- *பங்குகளில் அல்லது மறைமாவட்டத்தில் விவிலிய நூலகம் அமைப்பது.*
- *கொடி ஏற்றி விவிலியக் கொண்டாட்டங்கள் / விழாக்கள் நடத்துவது. விவிலியத் தேர் பவனி, நற்செய்திப் பெருவிழா கொண்டாட்டம், கிராமப்புற விவிலியப் பறைசாற்றல்.*
- *விவிலியம் காட்டும் விழுமியங்கள் மற்றும் தலைப்புகளில் பங்குகளிலும், மறைமாவட்டங்களிலும் தியானங்கள் வழங்குவது.*
- *இறைவார்த்தையை பறைசாற்றுவது தொடர்பான யுக்திகளோடு, வழிபாடு மற்றும் விவிலியம் பற்றிய அடிப்படை அறிவு கொண்ட வாசகர்களாக பொது நிலையினருக்கு பயிற்சி அளிப்பது.*
- *வாட்ஸ் அப், பேஸ்புக், டுவிட்டர், யூடியூப், மின் குழுமம், இணைய தளம், தொலைக்காட்சி சானல்கள் போன்ற சமூகத் தொடர்புசாதனங்கள் மற்றும் சமூக தளங்களை பயன்படுத்துதல்.*
- *யூடியூப் சானல்கள் மற்றும் கத்தோலிக்கர் தொலைக்காட்சி சானல்கள் வழியாகவும் விவிலிய பகுதிகளைப் பற்றிய ஆடல், பாடல் போட்டிகளை நடத்துவது.*
- *ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விவிலியப் புத்தகமாக எடுத்து அன்பியங்களில் விவிலிய வினாடி வினா நடத்துதல். சிறிய பரிசுகள் அன்பியங்கள் சார்பாக வழங்குதல்.*
- *பங்குகளில் போட்டிகள் நடத்தி பொருள்களுக்குப் பதிலாக விவிலியம் சார்ந்த பத்திரிகைகளை ஒரு வருட சந்தா, மூன்று வருட சந்தா, ஆயுள் சந்தா என்று பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்தல்.*
- *பள்ளி கூடுகையின்போது விவிலிய வாக்கியங்களை வாசித்தல். டிஜிட்டல் திரைகளில் விவிலிய வசனங்களைக் காட்டுவது. விவிலிய நாடகங்கள் மூலம் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் விவிலியம் வாசிக்க ஆர்வத்தை ஏற்படுத்துவது.*
- *பள்ளி அல்லது கல்லூரிப் படிப்பை முடித்து செல்லும் மாணாக்கருக்கு விவிலியத்தைப் பரிசாக வழங்குவது. பள்ளி மற்றும் கல்லூரிகளில் விவிலியம் கற்கும் குழுமங்களை உருவாக்குதல்.*
- *பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு கோடை விடுமுறையில், விடுமுறை விவிலிய வகுப்புகள் நடத்தலாம்.*

## விவிலியத்தை அரியணை ஏற்றும் திருநிகழ்வு

**குறிப்புகள்**

- விவிலியத்தை அரியணை ஏற்ற வீட்டின் முக்கியமான இடத்தில் மேடை அமைத்து, அலங்கரித்துத் தயார் செய்யவும்.
- ஒளி, தூப, மலர் அஞ்சலி சிறப்பாக அமைக்கவும்.
- குடும்பத்தில் உள்ள அனைவரும் வழிபாட்டில் பங்கேற்க வேண்டும்.
- அண்டை வீட்டாரையும், உற்றார் உறவினரையும் வழிபாட்டிற்கு அழைக்கலாம்.
- தினமும் ஓர் அதிகாரமாவது குடும்பமாகவோ, தனிப்பட்ட விதத்திலோ வாசிக்க வேண்டும்.
- விவிலியத்தை அரியணை ஏற்றுவதை ஆண்டுதோறும் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.
- தேவைக்கேற்ப வாசகங்களை மாற்றிக்கொள்ளவும்.

முதல்வர் : தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயரலே - ஆமென்.

முன்னுரை : (விவிலியத்தின் முக்கியத்துவம், அதை இல்லத்தில் அரங்கேற்றித் தினமும் வாசித்துச் செபிப்பதால் ஏற்படும் பயன்கள் இவைகளை விளக்குதல்).

**விவிலியத்தை அரியணை ஏற்றுதல்**

பாடல் : யாரிடம் செல்வோம் இறைவா (அல்லது) இயேசுவே உந்தன் வார்த்தையால் என்ற பாடலுடன் விவிலியத்தை அரியணை ஏற்றுதல்.

முதல்வர் : எங்களைப் படைத்து, எங்களோடு அன்புறவு கொண்டு, எந்நாளும் எங்களோடு வாழும் அன்பு இறைவா! உம்மைப் போற்றுகிறோம். நாங்கள் வாழும் இந்த இல்லத்தில் நீர் எந்நாளும் தங்கி, எங்களோடு பேசும்; உம் அடியார் கேட்கிறோம்.

எல். : ஆண்டவரே பேசும், உம் அடியார் கேட்கிறோம்.

முதல்வர் : அன்று ஆபிரகாமின் கூடாரத்திற்கு வந்து, அவரோடு தங்கி, உணவு உண்டு, உரையாடிய எங்கள் அன்பு இறைவா! உம்மை வணங்குகிறோம். இன்று எம் இல்லத்திற்கு வந்து தங்கி எங்களோடு பேசும்; உம் அடியார் கேட்கிறோம்.

எல். : ஆண்டவரே பேசும், உம் அடியார் கேட்கிறோம்.

முதல்வர் : இறைவாக்கினர்களோடு பேசி, அவர்களை அழைத்த இறைவா! இன்று எம்மோடும் பேசியருளும்; நாங்கள் கேட்கிறோம்.

எல். : ஆண்டவரே பேசும், உம் அடியார் கேட்கிறோம்.

முதல்வர் : மார்த்தா, மரியா வீட்டிற்கு வருகைதந்து அவர்களோடு அமர்ந்து பேசிய அன்பு ஆண்டவரே! உம்மை மாட்சிப்படுத்துகிறோம். இன்று எங்கள் வீட்டிற்கும் வந்து, எங்களோடு அமர்ந்து பேசும். உம் அடியார் கேட்கிறோம்.

எல். : ஆண்டவரே பேசும், உம் அடியார் கேட்கிறோம்.

முதல்வர் : இப்பொழுது நாம் இந்த வீட்டில் திருவிவிலியத்தை ஆடம்பரமாக அரியணை ஏற்றி வைப்போம். இன்றுமுதல் இறைவனுடைய வல்லமை மிகுந்த உடனிருப்பு இந்த வீட்டில் தங்கியிருக்கும்.

*(முதல்வர் விவிலியத்தைத் திறந்து அரியணை ஏற்றி வைத்தல். அப்போது ஒளி, தூப, மலர் அஞ்சலி செலுத்துதல். குடும்பத் தலைவர் அல்லது தலைவி விவிலியத்திற்கு மலர் மாலை சூட்டுதல்)*

*(வீட்டில் உள்ள அனைவரும் விவிலியத்தைத் தம் கரங்களால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ளுதல்)*

**முதல் வாசகம் : நெகேமியா 8:1,3,8-9a, 10b (அ) எசா 55:10-11 (அ) எரே 1:9-10 (அ) எசே 3:3**

மக்கள் அனைவரும், ஒரே ஆளென, தண்ணீர் வாயிலுக்கு எதிரே இருந்த வளாகத்தில் ஒன்று கூடினர். ஆண்டவர் இஸ்ரயேலுக்குக் கொடுத்த மோசேயின் திருநூலைக் கொண்டு வருமாறு திருநூல் வல்லுநர் எஸ்ராவை வேண்டினர். தண்ணீர் வாயிலுக்குமுன் இருந்த வளாகத்தில் காலைமுதல் நண்பகல்வரை ஆடவரையும், பெண்டிரையும், புரிந்துகொள்ளும் ஆற்றலுள்ள சிறுவரையும் பார்த்து குரு எஸ்ரா அதை உரக்க வாசித்தார். எல்லா மக்களும் திரு நூலுக்குச் செவி கொடுத்தனர். மக்களுக்குப் புரியும்படி தெளிவாகவும், பொருளோடும் கடவுளின் திருச்சட்டத்தை உரக்க வாசித்தார்கள். ஆதலால், மக்களும் வாசிக்கப்பட்டதன் பொருளைப் புரிந்துகொண்டனர். ஆளுநர் நெகேமியாவும், குருவும் திருநூல் வல்லுநருமான எஸ்ராவும், விளக்கம் கூறிய லேவியர்களும் மக்கள் அனைவரையும் நோக்கி: “இன்று கடவுளாகிய ஆண்டவரின் புனிதநாள்; எனவே, நீங்கள் அழுது புலம்பவேண்டாம்” என்றனர். ஏனென்றால், நம் ஆண்டவரின் புனிதநாள் இதுவே; எனவே வருந்த வேண்டாம்; ஏனெனில் ஆண்டவரின் மகிழ்வே உங்களது வலிமை” என்று கூறினார்.

**பதிலுரைப் பாடல் : திபா 119:57-64 (57)**

*பல்லவி:* *ஆண்டவரே! நீரே எனக்குரிய பங்கு; உம் சொற்களைக் கடைப்பிடிப்பதாக நான் வாக்களித்துள்ளேன்.*

ஆண்டவரே! நீரே எனக்குரிய பங்கு; உம் சொற்களைக் கடைப்பிடிப்பதாக நான் வாக்களித்துள்ளேன். என் முழுமனத்தோடு உம் திருமுகத்தை நாடினேன்; உமது வாக்குறுதிக்கேற்ப எனக்கு அருள்கூரும். **பல்லவி**

நான் நடக்கும் வழிகளை நன்கு ஆய்ந்தேன்; உம் ஒழுங்குமுறைகளின் பக்கமாய் அடியெடுத்து வைத்தேன். உம் கட்டளைகளைக் கடைப்பிடிக்க நான் விரைகின்றேன்; காலம் தாழ்த்தவில்லை. **பல்லவி**

தீயோரின் கட்டுகள் என்னை இறுக்குகின்றன: ஆயினும், உம் திருச் சட்டத்தை நான் மறவேன். நீதிநிறை உம் தீர்ப்புகளைக் குறித்து, உம்மைப் புகழ்ந்துபாட நள்ளிரவில் எழுகின்றேன். **பல்லவி**

உமக்கு அஞ்சி நடப்போர் யாவர்க்கும் உம் நியமங்களைக் கடைப் பிடிப்போர்க்கும் நான் நண்பன். ஆண்டவரே! உமது பேரன்பால் பூவுலகு நிறைந்துள்ளது; உம் விதிமுறைகளை எனக்குக் கற்பியும்! **பல்லவி**

**இரண்டாம் வாசகம்: உரோ 10:8-17 (அ) 2 திமொ 3:16-17 (அ) எபி 4:12**

வார்த்தை உனக்கு மிக அருகில் உள்ளது: உன் வாயில், உன் இதயத்தில் உள்ளது. இதுவே நீங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என நாங்கள் பறைசாற்றும் செய்தியாகும். ஏனெனில், இயேசு ஆண்டவர் என வாயார அறிக்கையிட்டு. இறந்த அவரைக் கடவுள் உயிர்த்தெழச் செய்தார் என நீங்கள் உள்ளூர நம்பினால் மீட்புப் பெறுவீர்கள். இவ்வாறு உள்ளூர நம்புவோர் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவர்: வாயார அறிக்கையிடுவோர் மீட்புப் பெறுவர். ஏனெனில் அவர்மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார் என்பது மறைநூல் கூற்று. இதில் யூதர் என்றோ கிரேக்கர் என்றோ வேறுபாடில்லை: அனைவருக்கும் ஆண்டவர் ஒருவரே. அவரை நோக்கி மன்றாடும் யாவருக்கும் அவர் அளவற்ற நலன்களைப் பொழிகிறார். ஆண்டவரின் திருப்பெயரை அறிக்கையிட்டு மன்றாடுகிறவர் எவரும் மீட்புப் பெறுவர் என்று எழுதியுள்ளது அல்லவா? ஆனால் அவர்மீது நம்பிக்கை கொண்டிருந்தாலன்றி, அவர்கள் எவ்வாறு அவரை நோக்கி மன்றாடுவார்கள்? தாங்கள் கேள்வியுறாத ஒருவர்மீது எவ்வாறு நம்பிக்கை கொள்வார்கள்? அறிவிக்கப்படாத ஒன்றுபற்றி அவர்கள் எவ்வாறு கேள்வியுறுவார்கள்? அனுப்பப்படாமல் அவர்கள் எவ்வாறு அறிவிப்பார்கள்? இதைப்பற்றியே, நற்செய்தி அறிவிப்போரின் பாதங்கள் எத்துணை அழகாய் இருக்கின்றன என்று மறைநூலில் எழுதியுள்ளது. ஆயினும் எல்லாருமே நற்செய்தியை ஏற்றுக்கொள்ள வில்லை: இதைக் குறித்தே எசாயா, ஆண்டவரே, நாங்கள் அறிவித்ததை நம்பியவர் யார்? என்று முறையிடுகிறார்.

**நற்செய்தி வாசகம்: யோவா 6:68-69 (அ) மத் 7:24-25 (அ) யோவா 15:7**

சீமோன் பேதுரு மறுமொழியாக, “ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன. நீரே கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம் அதை நம்புகிறோம்” என்றார்.

**இறைமக்களின் மன்றாட்டுகள்**

**முதல்வர் :** அன்புமிக்க சகோதரர்களே! சகோதரிகளே! உயிருள்ள வார்த்தையாம் திருவிவிலியத்தை நம் இல்லத்தில்

அரியணை ஏற்றினோம். இறைவார்த்தை என்னும் ஒளி நம் உள்ளத்திலும் இல்லத்திலும் என்றும் சுடர்விட்டு எரியும்படி இறைவனிடம் மன்றாடுவோம்.

***பதிலுரை :*** *ஆண்டவரே, உமது வார்த்தையால் எங்களை வழிநடத்தும்*

1. இறை ஏவுதலால் எழுதப்பட்ட விவிலியம் போதிப்பதற்கும், கண்டிப்பதற்கும், திருத்துவற்கும், நீதி நெறியில் நடத்துவதற்கும் பயனுள்ளதாய் இருக்கிறது (2 திமொ 3:16). எனவே ஆண்டவரே, உம் வார்த்தைகளின் ஒளியில் எங்களது வாழ்வை அலசிப் பார்க்கவும் தவறானவற்றைத் திருத்தி, நீதி வழியில் தினமும் நாங்கள் வாழவும் அருள்தர வேண்டுமென்று உம்மை வேண்டுகிறோம்.

2. "அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருக்கிறது" (யோவா 1:9). இயேசுவே! நீரே அந்த உண்மையான ஒளி. நீர் எங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் மகிழ்ச்சியின் ஒளியாகச் சுடர்விட்டு எரிய வேண்டுமென உம்மை வேண்டுகிறோம்.

3. "ஆண்டவரே! நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன!" (யோவா 6:68) அன்று பேதுரு சொன்ன அதே வார்த்தைகளை இன்று நாங்களும் சொல்கிறோம். முடிவில்லாத வாழ்வு தரும் உம்முடைய வார்த்தைகள் என்றும் எங்களோடு குடிகொண்டு வாழ, எங்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. "என் வார்த்தைகளை நீங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால், உண்மையில் என் சீடர்களாய் இருப்பீர்கள்" (யோவா 8:31) என்று கூறிய இயேசுவே, நாங்களும் உம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளில் நிலைத்திருப்பதன் வழியாக என்றுமே உமது உண்மையுள்ள சீடர்களாக வாழ வரம் தரவேண்டுமென்று உம்மை வேண்டுகிறோம்.

5. "நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால், நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்" (யோவா 15:7) என்று கூறிய இயேசுவே, உம் வார்த்தைகள் எங்களுள் நிலைத்து வாழ வரம் தரவேண்டுமென்று உம்மை வேண்டுகிறோம்.

*(தேவைக்கேற்ப மன்றாட்டுக்களைச் சேர்த்துக்கொள்ளவும். பொதுத் தேவைகள், உடல் நலம், குடும்பத் தேவைகள் ஆகியவற்றுக்கான மன்றாட்டுக்களும் இடம் பெறலாம்.)*

**முதல்வர் :** செபிப்போமாக! எல்லாம் வல்ல அன்பு இறைவா! இன்று இந்த திருவிவிலியத்தின் வடிவில் எங்கள் இல்லத்தில் எழுந்தருளி இருக்கின்றீர், உம்மை வரவேற்று, நன்றியுணர்வுடன் போற்றிப் புகழ்கின்றோம். ஆண்டவரே! எங்களோடு என்றும் இருந்தருளும். உம் வார்த்தைகள்

எங்கள் வாழ்வுக்கு வழியாகவும் ஒளியாகவும் இருக்கும்படி நாங்கள் ஒவ்வொரு நாளும் உம் வார்த்தைகளை வாசிக்கவும், தியானிக்கவும், செபிக்கவும், அதன் வழியாக என்றும் உமக்கு உரியவர்களாக வாழவும் வரம் கேட்டு உம்மை இறைஞ்சுகின்றோம். உமது வார்த்தையே எங்கள் வாழ்வாகிட அருள்வேண்டி, உம் திருவடிகளில் எம் விண்ணப்பங்களை வைத்துள்ளோம். இவற்றை எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக நிறைவேற்றித் தர உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

**ஆசியுரை**

முதல்வர் : தம் திருமகன் இயேசுவை, இங்கு கூடியுள்ள நம் அனைவருக்கும் உண்மையின் வார்த்தையாக அளித்த இறைவன், நமக்கு ஆசி வழங்குவாராக.

எல் : ஆமென்.

முதல்வர் : நம் தேவைகளை அறிந்து, ஒவ்வொரு நாளும் நம்மை வழிநடத்தும் ஆண்டவர் இயேசு, நம்மை நிறை உண்மையை நோக்கி வழிநடத்துவாராக.

எல் : ஆமென்.

முதல்வர் : எல்லாம் வல்ல இறைவன் தந்தை, மகன், தூய ஆவியார் நம்மை ஆசீர்வதிப்பாராக.

எல் : ஆமென்.

**இறுதிப்பாடல்**

வாழ்வது நான் அல்ல (அல்லது) பொருத்தமான பாடல்

**அச்சிட தடையில்லை**

**பேரருட்திரு. M. அருள்ராஜ்**
*முதன்மைகுரு, சென்னை-மயிலை உயர்மறைமாவட்டம்*

**அச்சிடலாம்**

**பேராயர். மேதகு. Dr. ஜார்ஜ் அந்தோணிசாமி DD, STD, JCL**
சென்னை-மயிலை உயர்மறைமாவட்டம்

**(நன்றி : சென்னை-மயிலை உயர்மறைமாவட்ட விவிலியப் பணிக்குழு)**

## இனிய தோழன் மாத இதழை வாங்கிப் பயன்பெறுவீர்!

**தொடர்புக்கு**
**தோழன் ஆசிரியர்**
**முப்பணி மையம் (TNBCLC)**
**திண்டிவனம் - 604 001**
**விழுப்புரம் மாவட்டம்.**

| | | |
|---|---|---|
| ஒரு வருட சந்தா | - | ரூ. 200 |
| மூன்று வருட சந்தா | - | ரூ. 500 |
| ஐந்து வருட சந்தா | - | ரூ. 750 |
| ஆயுள் வருட சந்தா | - | ரூ. 2500 |

**தோழன் சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
**தோழன் டிரஸ்ட்,** TNBCLC,
53/A6 மரக்காணம் ரோடு, தபால் பெட்டி எண். 11
திண்டிவனம் – 604 001. அலைபேசி : 63 81 50 31 06
**காசோலை :** "THOZHAN TRUST" **(அல்லது)**

| | | |
|---|---|---|
| Bank | : | IOB |
| Branch | : | Tindivanam |
| A/C Name | : | Thozhan Trust |
| A/C No | : | 171002000000265 |
| IFS Code | : | IOBA0001710 |

என்றும் அன்புடன்

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்**
*பொதுச்செயலர்,*
*தமிழக விவிலியப் பணிக்குழு,*
*முப்பணி மையம், திண்டிவனம்*

வெளியீடு

**அருள்பணி. A. ஜான் பிரிட்டோ பாக்கியராஜ்**
இயக்குநர்,
முப்பணி மையம், திண்டிவனம் - 604 001.

# முப்பணி மைய பொன்விழா ஆண்டு
## (1974 - 2024)
## விவிலியக் கட்டுரைப் போட்டி!

### தலைப்புகள்

இளைஞர்களுக்கு :

**இளைஞர் இயேசுவின் இலட்சியக் கனவு – அன்றும் இன்றும்**

பெரியவர்களுக்கு :

**திருவிவிலியம் கூறும் தலைமைத்துவப் பண்புகள்**

**நினைவில் நிறுத்துக :**

முதல் பரிசு : ரூ. *3000/–*
இரண்டாம் பரிசு : ரூ. *2000/–*
மூன்றாம் பரிசு : ரூ. *1000/–*
மற்றும் ஆறுதல் பரிசுகள்

1. 5 பக்கங்களுக்கு மிகாத கையெழுத்துப் பிரதியாக இருத்தல் வேண்டும்.
2. திருவிவிலியம் பொதுமொழிபெயர்ப்பை மட்டும் பயன்படுத்துக.
3. விவிலிய மேற்கோள்கள் இடம் பெற்று, விவிலியத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.
4. வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **31.10.2023**
5. அனுப்ப வேண்டிய முகவரி :

**அருள்பணி. S. ஸ்தனிஸ்லாஸ்**
செயலர், தமிழக விவிலியப் பணிக்குழு
53/A6 மரக்காணம் ரோடு,
அஞ்சல் பெட்டி எண் 11,
முப்பணி மையம், திண்டிவனம்

**கலந்து கொண்டு பரிசைத் தட்டி செல்வீர்!**